1986 மே 8]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஏற்கனவே சொன்னதைப்போல முதன் முதலாக இது ஒரு பரீட்சார்த்தமாகப் பார்க்கப்படுகின்ற திட்டம். இது வெற்றிகரமாக வந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய யோசனையை அரசு ஏற்கலாம்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, காற்று வீசும் இடமான கயத்தாற்றிலே காற்று இயக்கி மூலமாக நல்ல முறையிலே வெற்றிகரமாக தண்ணீர் பம்பு இயங்கி வருகிறது. எனவே, அங்கே இதையும் ஆரம்பிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல் இது பரிட்சார்த்தமாக, தூத்துக்குடியிலே இப்பொழுது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இது நல்லபடியாக வெற்றி பெற்றுக் கொண்டு இருக்கிறது. மத்தியப் பேரரசு நல்ல உதவிகளைச் செய்கிறது. ஆகவே, அதை வைத்து தமிழகம் முழுவதும் எங்கெங்கே காற்று அதிகமாகக் கிடைக்கிறதோ அந்தக் காற்றை வைத்து மின் உற்பத்தியைச் செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி

705 (*வினா எண். 7960)—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயார் செய்து காற்றாலைகள் மற்றும் நீரிறைக்கும் பம்புகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு க. இராசாராம்: தஞ்சை மாவட்டத்தில், சூரிய ஒளிசக்தியை மின்சக்தியாக மாற்றி அதன் மூலம் நீர் இறைக்கும் சாதனங்கள் (பம்புகள்) 10 விவசாயிகளின் நிலங்களில் செயல் விளக்க அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன.

[1986 மே 8

அவற்றின் செயல்திறனைக் கண்டறிந்த பின்புதான் மேற்கொண்டு இவ்வாறான சூரிய ஒளி மின் நீர் இறைக்கும் சாதனங்களை நிறுவுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

மேலும், தஞ்சை மாவட்டத்திலேயும், தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களிலேயும் தேசிய காற்றாலை செயல் விளக்கத் திட்டத்தின் கீழ் காற்று சக்தியை பயன்படுத்தி நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வகைக் காற்றாலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டத்தை தஞ்சை மாவட்டத்திலே பயன்படுத்துகின்ற இந்த அமைச்சரவைக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, தஞ்சை மாவட்டத்திலே எந்த எந்தப் பகுதியிலே இப்படிப்பட்ட சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற இந்தத் திட்டம் செயல்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயார் செய்து நீர் இறைக்கும் சாதனங்கள் கீழ்க்கண்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன :—

திரு. ராமசாமி உடையார் அவர்கள், தஞ்சாவூர்,

திரு. தமிழ்ச் செல்வன், மன்னார்குடி,

திரு. ஏ. பழனிவேல், குருவிக்கரம்பை,

திரு. ஆர். கோவிந்தராசு, கபிஸ்தலம்,

கற்பக மங்கலத்தில் ஒருவர்,

என். அபிராமி, கீழையூர்,

திரு. கே. சிவவடிவேல் உடையார், பெருஞ்சேரி,

திரு. ஆர். சாம்ராஜ், வேளாங்கண்ணி,

திரு. ஆர். குலசேகரன், வேளாங்கண்ணி,

திரு. எஸ். நடராஜ், கும்பகோணம்

1986 மே 8]

திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினுடைய முக்கியமான விவசாயப் பகுதியாக அமைந்திருப்பது நன்னிலம். நன்னிலமாக காட்சியளித்த அந்த நன்னிலம் இன்றையதினம் வறண்ட பகுதியாகக் காட்சியளிப்பதை முன்னிட்டு, இப்படிப் பட்ட சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற இந்தத் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகின்ற மின் பம்புகள் நன்னிலம் தாலுக்காவிலே இந்த ஆண்டு ஏதாவது விவசாயிகளுக்குப் பரீட்சார்த்தமாக அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவசவர்களே, நன்னிலம் தாலுக்காவிலே தற்போது அப்படிப்பட்ட ஏற்பாடு இல்லை. ஆனால் தமிழகம் பூராவிற்கும் ஒருங்கிணைந்த கிராமப்புற செயல் திட்டத்தின் கீழ் 130 காற்றாலைகளை 5 பேரூராட்சி ஒன்றியங்களிலே நிறுவத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அவற்றிற்காக வேலை மட்டும் தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

திரு. துரை. கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சூரிய ஒளியிலிருந்து தண்ணீர் இறைக்கின்ற மின்சாரக் கருவி தஞ்சை மாவட்டத்தினுடைய பல்வேறு பகுதிகளிலேயும் தரப்பட்டு இருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அடிப்படித் தரப்பட்டிருக்கிற அந்தக் கருவியினுடைய விலை என்ன என்பதையும் அது மானிய விலையிலே வழங்கப்பட்டு இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது சுமார் 44,000 ரூபாய் அடக்க விலை ஆகும். இதற்கு பழங்குடியிலே உள்ள விவசாயிகளுக்கு 4,000 ரூபாய் விலையிலேயும், சாதாரண விவசாயிகளுக்கு 5,000 ரூபாய் விலையிலேயும் மானியமாகவே இது வழங்கப்படுகிறது.

(முற்பகல் 9-20)

அதோடு, நம்முடைய முன்னாள் அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் மகன் கூட ஒரு இயந்திரத்தை உருவாக்கியிருக்கிறார். கழிவுப் பொருள்களில் இருந்து மின்சாரத்தை எடுப்பதற்கு ஒரு இயந்திரத்தைச் சென்னையிலே நிறுவி இருக்கிறார்கள். அதுவும் வெற்றிகரமாக நடக்கிறது என்பதை நாங்கள் பார்த்து விட்டு வந்திருக்கிறோம். அதைக் கூட நாம் பயன்படுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து, அதிலிருந்து பம்ப் செட் இயக்குவது என்பதில் சாதாரணமாக முக்கால் அங்குலம் குழாயில் கூட தண்ணீர் வரவில்லை. அதனாலே, விவசாயத்திற்கு அது பெயிலூர் ஆகி இருக்கிறது. பணக்காரர்கள் வீட்டிலே, தோட்டத்திற்கு வேண்டுமென்றால், நான்கு தென்னை மரங்களுக்குத் தண்ணீர் விடுகின்ற அளவுக்குக் கிடைக்கிறது. அது மட்டுமல்ல, அந்தத் திட்டம் பெயிலுயூர் ஆகி, பல பேர்கள், மனு கொடுத்தவர்கள் எல்லாம், வேண்டாம் என்று தஞ்சை மாவட்டத்திலே பின்வாங்கியதன் காரணமாக, இந்தத் திட்டத்தை அறவே மாற்றி, காற்றின் மூலமாக நீர் இறைக்கிற அமைப்பிற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, காற்றின் மூலமாக நீர் இறைக்கிற காற்றாடிகள் நிறுவுவதிலும் நாங்கள் கவனம் செலுத்தி இருக்கிறோம் என்று சென்ற கேள்வியிலேயே நான் சொன்னேன். ஒரு காற்றாடியினுடைய விலை ரூ. 12,500 ஆகிறது. மத்திய அரசு காற்றாடிகளின் விலை முழுவதையும் மானியமாக வழங்குகிறது. நிறுவுவதற்கு அடித்தளம், தொட்டி கட்டுதல் போன்ற செலவுகளை மட்டும் விவசாயிகள் ஏற்க வேண்டும். இதைத் தவிர ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் 130 காற்றாடிகள் நிறுவ மானியம் அளித்துள்ளது.